**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**வார பாடசாலை**

| | | |
|---|---|---|
| **செயலட்டை 34** | **பாடம்:- வணிகக்கல்வி** | **தரம்:12** |

**தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)**

**இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்**

**வாரம் 02**

**06.12.2021 -12.12.2021**

## மாதிரி வினாக்கள்

1. ஒரு நாட்டின் சர்வதேச வியாபாரத்தினை பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூன்று அளவீடுகளை குறிப்பிடுக.

2. நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் வித்தியாசத்தை அளவிட பயன்படுத்தப்படும் இரு முறைகளையும் குறிப்பிடுக.

3. சிறு வணிகங்கள் முகம் கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் மூன்றினை குறிப்பிடுக.

4. இலங்கை மத்திய வங்கியின் பிரதான கொள்கை வீதங்கள் எவை?

5. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிற்றளவு வணிகங்களின் நான்கு பிரதான பங்களிப்புக்களை குறிப்பிடுக.

6. குறிப்பிட்ட பொருள் அல்லது சேவை ஒன்றை உற்பத்தி செய்வதில் ஒரு நாடு அல்லது பிரதேசம் அல்லது நிறுவனம் அல்லது தனியார் கொண்டிருக்கும் சிறப்பாற்றல் எவ்வாறு அழைக்கப்படும்?

7. "சுயாதீனமாகவும் சொந்தமாகவும் உருவாக்கி செயற்படுத்தகூடியதும் அதனது துறைவாரியான செயற்பாட்டில் மேலாதிக்கம் செலுத்த முடியாததுமான ஒன்று சிற்றளவு வணிகம் ஆகும்". மேற்கூறப்பட்ட வரைவிலக்கணம் எந்நிறுவனத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டது?

8. தற்போது தொலைபேசி வடிவமைப்பில் பரவலாக பயன்படுத்தப்படும் CDMA என்பதன் விரிவாக்கம் யாது?

9. மான்செஸ்டர் மாநாட்டில் சர்வதேச கூட்டுறவு முன்னணி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுறவு கொள்கைகள் நான்கினை பெயரிடுக.

10. நடைமுறையில் காணப்படும் சில்லறை வியாபாரிகளின் நவீன போக்குகள் யாவை?